தினத்தந்தி
திருச்சி
25/01/2020



ராம்கோ சிமெண்டு ஆலை சார்பில்

# ரூ.30 லட்சத்தில் 40 கழிவறைகள் திறப்பு

செந்துறை, ஜன.25-

அரியலூர் மாவட்டம், செந்துறை அருகே உள்ள ஆலத்தியூர் கிராமத்தில் இயங்கி வருகிறது ராம்கோ சிமெண்டு ஆலை. இந்த ஆலையின் சமூக நல பணிகள் திட்டத்தின் கீழ் கிராம மக்களின் சுகாதார சீர்கேட்டை களையும் வகையில் தனிநபர் கழிவறை கட்டிக்கொடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. அதன்படி மணக்குடையான் ஊராட்சிக்கு உட்பட்ட இருங்களாக்குறிச்சி கிராமத்தில் 80 "ஸ்மார்ட்" கழிவறைகள் கட்டி தர திட்டமிடப்பட்டது.

அதன்படி திருச்சியை சேர்ந்த தனியார் நிறுவனத்தில் ஒப்பந்தம் செய்து குளியலறையுடன் கூடிய 40 கழிவறைகள் கட்டி முடிக்கப்பட்டது. அதனை பயனாளிகளுக்கு வழங்கும் விழா இருங்களாக்குறிச்சி காலனி தெருவில் நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர் சங்கர் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் ராம்கோ சிமெண்டு நிறுவனத்தின் மூத்த உப தலைவர்கள் ஆஷிஷ்குமார் ஸ்ரீவஸ்தவா (உற்பத்தி), சந்தானகிருஷ்ணன் (பணிகள்), நிர்வாக பொது மேலாளர் ஞானமுருகன் மக்கள் தொடர்பு அதிகாரி கண்ணன் மற்றும் ஒன்றியக்குழு உறுப்பினர் தமிழ்மாறன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு கழிவறைகளை திறந்து வைத்து பொதுமக்களிடம் ஒப்படைத்தனர். சிமெண்டு ஆலைகளின் இந்த செயல் அப்பகுதி மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.